2018 ஜூன் 26]

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் கிட்டத்தட்ட 3,000–க்கும் மேற்பட்ட நிரந்தரத் தொழிலாளர்களும், 7,000–க்கும் மேற்பட்ட தற்காலிக தொழிலாளர்களும் பணிபுரிந்து வருகின்றார்கள். தற்போது அங்கு நிதி நெருக்கடியின் காரணமாகவும், அந்த நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாமலும், அந்த நிறுவனத்தின் நிலங்களை வனத் துறைக்கு ஒப்படைக்கப் போவதாகச் சொல்கிறார்கள். இதனால், கம்பெனிகள் சட்டம், 1957–ன்படி* last *கட்டமான* wind up *செய்யக்கூடிய சூழ்நிலையை எட்டிவிடுமோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வுரிமை பாதிக்கப்படும் நிலை உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் தலையிட்டு தமிழ்நாடு தேயிலைத் தோட்ட நிறுவனத்திற்கு போதுமான நிதியை, சிறப்பு நிதியை ஒதுக்க . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி, நீங்கள் இதையெல்லாம் மானியக் கோரிக்கையின்போது பேச வேண்டும். இது தார்ச் சாலை அமைப்பது குறித்த கேள்வி. திரு. அ. ராமு, குன்னூர் தொகுதியைச் சேர்ந்தவர். நீங்களும் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் உங்களை துணை வினா கேட்க அனுமதித்தேன். ஆனால், நீங்கள் தொழிலாளர் பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறீர்கள். மானியக் கோரிக்கை நாளை மறுநாள் வருகிறது. அன்றைக்கு இதுகுறித்துப் பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 212, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

212—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***19046—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றியம், பாலூர் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை

[2018 ஜூன் 26

மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றியம், பாலூர் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு அரசின் நெறிமுறைகளுக்கு உட்பட்டு இல்லாத காரணத்தால் அந்தப் பள்ளியைத் தரம் உயர்தத இயலவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.

திருமதி ப. சத்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழரை கோடி தமிழினத்தை இமையாய் காத்து நின்று, தாலிக்கு தங்கம் தந்து, தமிழுக்கு உயிர் தந்து, உலகத் தர கல்வி தந்து தமிழக மக்களின் உள்ளமெல்லாம் நிறைந்து நிற்கும் வள்ளல் மனத் தாய் வழிநடத்தும் கழக ஆட்சியில், பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி, அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பாலூர் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த ஆவன செய்து, வருங்கால தமிழகத்தை வழிநடத்தப்போகும் மாணவச் செல்வங்களின் வாழ்வில் ஒளியேற்றிட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 26]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த குறைந்தது 100 மாணவர்கள் இருக்க வேண்டும். அது இல்லை என்பது ஒன்று. அதேநேரத்தில் அங்கே பல்வேறு இடங்களில், குறிப்பாக சுற்று வட்டாரங்களில் அரசு மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன என்பதால், தரமுயர்த்த இயலவில்லை, இருந்தாலும் அரசு அதைப் பற்றி மீண்டும் ஆய்வு செய்து மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை கனிவாக பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பம் அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த என்னிடத்திலே ஒரு கோரிக்கை வைத்தார்கள். அது இந்த ஆண்டு நிறைவேற்றித் தரப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலூரைச் சுற்றியுள்ள 15 கிராமங்களில் உள்ள மாணவ, மாணவியர்கள் பாலூர் பள்ளியில் படிக்கின்றனர். 10 ஆம் வகுப்பு படித்துவிட்டு 11 ஆம் வகுப்பு படிக்க, 20 கி.மீ. தூரத்தில் உள்ள கடலூர் பள்ளிக்குச் சென்றுதான் படிக்க வேண்டும். இதனால் பெரும்பாலான மாணவ, மாணவியர்கள் 10 ஆம் வகுப்புடன் நின்றுவிடுகின்றனர். எனவே, பாலூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக அவசியம் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரையில், உறுப்பினர் குறிப்பிடும் பகுதியில் 7 கி.மீ.*

தொலைவில் நடுவீரப்பட்டில் ஒரு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. 8 கி.மீ. தொலைவில் C.N. பாளையத்திலே அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. செம்பேடு கிருஸ்துவ மேல்நிலைப் பள்ளி 4 கி.மீ. தொலைவிலே இருக்கிறது. 8 கி.மீ. தொலைவிலே நெல்லிக்குப்பத்திலே ஒரு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கைகளில், ஒன்றை இந்த ஆண்டு நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. மொத்தமாக 100 மேல்நிலைப் பள்ளிகளைதான் உருவாக்க முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, இதில் எது முக்கியமானது என்று அவர் தேர்வு செய்வாரேயானால் அது நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.*

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட மானூர் ஒன்றியம், குறிச்சிக்குளம் பஞ்சாயத்து பகுதியில் அமைந்துள்ள அரசு நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்தப் பகுதியில் வீட்டிற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் வாய் பேச முடியாத மாற்றுத் திறனாளிகளாக உள்ள காரணத்தினால் மேற்படிப்பிற்கு வேறு பள்ளிகளுக்கு அனுப்பாமல் இருப்பதால் அந்த மாணவர்களுடைய படிப்பு வீணாகப் போகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி, மேற்படி பள்ளியை தரமுயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, வாய் பேச இயலாத குழந்தைகள் பலபேர் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். விதிமுறைகளுக்குட்பட்டு இருக்குமேயானால் இந்த ஆண்டே உறுப்பினரின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு*

2018 ஜூன் 26]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

213—

மின் மாற்றி

***13132—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிபாக்கம் ஊராட்சி ஒன்றியம், வடமாம்பாக்கம் ஊராட்சி, மங்கம்மாப்பேட்டை காலனியில் 100 KVA மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2 ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கின்றார். 20–12–2017 அன்று 100 KVA மின்மாற்றி ஒன்று கூடுதலாக நிறுவப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா; ஏழை தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்; "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என வாழ்ந்து மறைந்தவர் புரட்சித் தலைவி அம்மா ஆகியோர்களின் வழியில் இன்றைக்கு ஆட்சியையும், கட்சியையும் வழி நடத்திச் செல்கின்ற எளிமையின் சிகரம்*